## பறவைக் காய்ச்சல் நோய்

**பறவைக் காய்ச்சல் நோய் கோழி, வாத்து, வான்கோழி மற்றும் வனப்பறவைகளைத் தாக்கும். மனிதரையும் தாக்கவல்லது.**

**நோய்தாக்கிய வெளிநாடுகளில் இருந்து இங்குவரும் வனப்பறவைகள் மூலம் இந்நோய் நமது நாட்டில் நுழைய வாய்ப்பு உள்ளது.**

பறவைக்காய்ச்சல் நோய் வராமல் இருக்க கீழ்க்காணும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பண்ணையாளர்கள் தவறாது கடைபிடிக்க வேண்டும்.

1. வனப்பறவைகள் பண்ணைக்குள் நுழையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
2. வாத்து, வான்கோழி, கோழிகள் முதலிய பல்வேறு இனப்பறவைகளை ஒரே பண்ணையில் வைத்து வளர்க்கக்கூடாது.
3. வெளியாட்கள், வாகனங்கள், விலங்குகள் பண்ணைக்குள் நுழையக்கூடாது.
4. இதரபண்ணை உபகரணங்கள் பகிர்ந்து கொள்ளல் கூடாது.
5. பண்ணை உபகரணங்கள் மாதம் இருமுறை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.
6. கோழிப்பண்ணையில் அசாதாரண இறப்புகள் இருந்தால் உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

**பறவைக் காய்ச்சல் நோயின் அறிகுறிகள் :**

தலை மற்றும் கொண்டை வீக்கம், கொண்டையில் நீல நிறம் பரவுதல், சோர்வு அதிக அளவில் இறப்பு இறந்த கோழிகள் தசைகளில் இரத்தக்கசிவு, மூச்சுக் குழலில் அதிக சளி அனைத்து உள் உறுப்புகள் மற்றும் கால்களின் மீது இரத்தக் கசிவு.









**மனிதரில் பறவைக்காய்ச்சல் நோய் :**

நோய் பாதித்த பண்ணைகளில் நோயற்ற மற்றும் இறந்த கோழிகளை கையாளுவோருக்கு இந்நோய் சுவாசக் காற்று மூலம் பரவக் கூடும். காய்ச்சல் தொண்டைப்புண், இருமல் ஆகியவை மனிதரில் இந்நோயின் அறிகுறிகள். நன்கு சமைத்த கோழிக்கறி மற்றும் முட்டைகள் உண்பதால் இந்நோய் பரவாது. பறவைக்காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை அல்லது தடுப்பு மருந்து தற்போது இல்லை. சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் மட்டுமே நோய் வராமல் தடுக்க முடியும்.

**மண்டல இணை இயக்குநர்,**

கால்நடை பராமரிப்புத்துறை, கோயம்புத்தூர்